காலை முரசு

பக்கங்கள்:-19

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 21 | ஞாயிற்றுக்கிழமை | 05.01.2025 | அதிர்வு 156

## யாழில் நிமோனியாவால் இளம் குடும்பஸ்தர் சாவு!

யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நிமோனியாக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியைச் சேர்ந்த யுவானிஸ் நேசராசா (வயது 42) என்ற மூன்று பிள்ளைகளின் 05

# எக்னெலிகொட சுட்டுக் கொல்லப்பட்டாரா? அநுர அரசிடம் நீதியைக் கோருகின்றேன்




### சந்தியா எக்னெலிகொட தெரிவிப்பு

“சுயாதீன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் தற்போதைய நீதிமன்ற செயன்முறை ஆகிய வற்றின் மீது எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. எனவே. தற்போதைய அரசின் மீது நம்பிக்கை வைத்து, விரைவாக நீதியை நிலைநாட்டுமாறு கோருகின்றேன்.”

– இவ்வாறு பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார். 05

### அநுர அரசின் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ உறுதிமொழி

# ஊடகங்களை ஒருபோதும் அடக்கமாட்டோம்



## கொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம்

“கடந்த அரசுகள் போல் நாமும் ஊடகங்களை அச்சுறுத்தி அடக்கமாட்டோம். ஊடகங்கள் நடுநிலையுடன் சுதந்திரமாகச் செய்திகளை வெளியிட முழு உரிமையுண்டு. அதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.”

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அமைச்சரவையின் பேச்சாளர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். 05

## உள்ளூராட்சித் தேர்தல் குறித்து அடுத்த வாரம் கலந்துரையாடல்

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு




உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து எதிர்வரும் வாரம் விசேட கலந்துரையாடலில் ஈடுபட 05

## ஒன்றரை வயது குழந்தை நீர்நிலைக்குள் வீழ்ந்து பலி

### மட்டக்களப்பில் துயரம்



(குனகராசா சரவணன்)

நீர்நிலைக்குள் வீழ்ந்து ஒன்றரை வயது குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம், போரதீவுப்பற்று இளைஞர் விவசாயத் 05




தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ என்ற இலங்கையின் பொது சேவைகளைச் சுத்தப்படுத்தும் திட்டம் என்பது ‘நாயின் வேலையை கழுதை பார்க்கும் நடவடிக்கை’ அல்ல.

ஆளும் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் சுண்ணக்கல் ஏற்றி வந்ததாகக் கூறப்படும் டிப்பர் வாகனம் ஒன்றைச் சினிமாப் படப் பாணியில் கலைத்துத் துரத்திச் சென்று குறுக்காக தமது வாகனத்தை விட்டு, வழிமறித்துத் தடை செய்து, அடாவடிச் சோதனை நடத்தி இருக்கிறார். இது அவரது அத்துமீறிய நடவடிக்கை. பொலிஸின் வேலையை அரசியல்வாதி செய்வது பொருத்தமற்றது. பொலிஸைக் கொண்டே இந்தப் பணியைச் செய்திருக்க வேண்டும்.

நாயின் வேலையை நாய் பார்க்க வேண்டும். கழுதை பார்க்க முயலக் கூடாது.

இத்தகைய அரசியல் ஸ்டண்ட் வேலைகள் மக்கள் மத்தியில் வரவேற்பு பெறும் 05

# ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதை அனுமதிக்க முடியாது: ஐக்கிய மக்கள் சக்தி



ஊடகங்கள் முன்வைக்கும் விமர்சனங்களிலுள்ள யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அதனை விடுத்து ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதை அனுமதிக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

மாறாக பிழையான அல்லது போலி செய்திகள் வெளியிடப்பட்டால் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அஜித் பி. பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஊடக ஒடுக்குமுறை தொடர்பில் அரசாங்கத்துக்கு விசேட தேவையொன்று ஏற்பட்டுள்ளது. ஆட்சியைப் பொறுப்பேற்று மூன்று மாதங்களுக்குள் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கம் ஊடகங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக அரசாங்க பேச்சாளரால் பத்திரிகைகளின் பெயர் குறிப்பிடப்பட்டு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளை கடுமையாக எதிர்க்கின்றோம்.

நல்லாட்சி அரசாங்கத்திலும் ஊடகங்கள் அரசாங்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தன. ஆனால் நாம் அவற்றை அச்சுறுத்தவில்லை."– என்றார்.

# இறக்குமதி செய்யப்படும் அரிசி திருப்பி அனுப்பப்படும்

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

தற்போது வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு அமைய, எதிர்வரும் 10ஆம் திகதிக்கு பின்னர் வர்த்தகர்களால் அரிசி இறக்குமதி செய்யப்பட்டால் அவை மீண்டும் திருப்பி அனுப்பப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரவித்துள்ளார்.

அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 10 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி வரை 86,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் வசந்த சமரசிங்க தெரவித்துள்ளார்.



# ஜனாதிபதி அநுரவுக்கு எதிராக தேசிய மக்கள் சக்திக்குள் சதி

## துமிந்த திஸாநாயக்க கூறுகின்றார்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முற்போக்கு சிந்தனையுடன் "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள போதிலும், தேசிய மக்கள் சக்திக்கு அதற்கு எதிராக சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து கருத்து தெரிவிக்கும் போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுகாதாரத்துறைக்கு தனியாரின் ஒத்துழைப்பு தேவையில்லை என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடா அல்லது தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடா அல்லது நலிந்த ஜயதிஸ்ஸவின் தனிப்பட்ட நிலைப்பாடா என்பது தெரியாது? ஆனால் அவரால் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த கருத்து மிகப் பாரதூரமானதாகும். "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தன்று மாத்திரம் தரையில் இறங்கி வேலை செய்வதற்கும், இந்த வேலைத்திட்டம் நிறைவு பெறும் வரை தரையிலேயே வேலை செய்வதற்கும் இடையில் வேறுபாடு உண்டு.

எனவே நாம் இது தொடர்பில் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். இத்திட்டம் நிறைவடையும் வரை எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களால் இந்தளவுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டால் அது மகிழ்ச்சிக்குரியதாகும்.

"கிளீன் ஸ்ரீலங்கா" என்ற தொனிப்பொருள் சிறந்ததாகும். ஆனால் இதன் உள்நோக்கம் என்ன என்பது யாருக்கும் தெரியாது. இந்த வேலைத்திட்டத்தை முதலில் தேசிய மக்கள் சக்திக்குள்ளிருந்து ஆரம்பிக்க வேண்டும்."– என்றார்.

# இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளார் தென்னாபிரிக்க கிரிக்கெட் ஜாம்பவான்




தென்னாப்பிரிக்காவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜொன்டி ரோட்ஸ் தனது குடும்பத்தினருடன் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளார்.

இவர் காலி, அஹுங்கம உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் உள்ள சுற்றுலாத்தலங்களைக் கண்டுகளிக்கவுள்ளார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜொன்டி ரோட்ஸ் தனது குடும்பத்தினருடன் முச்சக்கரவண்டியில் இலங்கையில் உள்ள சுற்றுலாத்தலங்களுக்கு செல்லவுள்ளார். ஜொன்டி ரோட்ஸ் தனது குடும்பத்தினருடன் முச்சக்கரவண்டியில் பயணம் செய்யும் புகைப்படம் தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது.

முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜொன்டி ரோட்ஸ் மற்றும் அவரது குடும்பத்தினரின் இலங்கைக்கான வருகை இலங்கையின் சுற்றுலாத்துறையை மேலும் ஊக்குவிக்கும் ஒன்றாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் மாற்றமில்லை




மது சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

தற்போது விற்பனை செய்யப்படும் விலையிலேயே தொடர்ந்தும் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன்கள் விற்பனை செய்யப்படும் என அந்த நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு சலுகை வழங்கும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 3,690 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகிறது

5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 1,482 ரூபாயுக்கும் 2.3 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 694 ரூபாயுக்கும் தொடர்ந்து விற்பனை செய்யப்படுமென லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.





# சீனி உற்பத்தியை அதிகரிப்பதில் அரசாங்கம் விசேட கவனம்

நாட்டில் சீனி உற்பத்தியினை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெல்வத்த மற்றும் செவனகல சீனி தொழிற்சாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி தொழிற்சாலைகள் மூலம், உற்பத்தி செய்யப்படும் சீனியை முறையாக விநியோகிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.


















## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று எதிர்பார்ப்பில் அவர் இதைச் செய்திருப்பார் என்று நினைக்கிறேன். 'புதுத் தும்புக்கட்டை நன்றாகக் கூட்டுகின்றது' என்று காட்ட அவர் முயற்சிக்கிறார் போலும். இது எல்லாம் வடக்கு மக்கள் கண்டு களித்த – கழித்த – காலங்கள் கடந்த வீர தீரங்கள். நேரடி யுத்த வீர தீர பராக்கிரமங்களை நேரில் பார்த்த யாழ்ப்பாண மக்களுக்கு இந்த ஸ்டண்ட் விளையாட்டுக்கள் பெரிதும் அதிசயம் தரப்போவதில்லை. வேண்டுமானால் 'தங்கமே.. தங்கம்!' என்று அரற்றிப் பாருங்கள். சில சமயங்களில் ஆன்றிமார் எடுபடலாம். அவ்வளவுதான்.

இந்தச் சுண்ணக்கல் விவகாரம் அவ்வளவு சூடு பிடிப்பதற்கு அதிகாரத்தில் இருப்பவர்கள் நிலைமையை தெளிவுபடுத்தி, சட்டத்தை விளக்கமாக மக்களுக்கு எடுத்துரைக்காதமைதான் பிரதான காரணம் என்று நான் நினைக்கிறேன்.

சுண்ணக்கல் விவகாரம் ஏற்கனவே முன்னைய அரசின் காலத்தில் – கடந்த வருடத்தில் – யாழ் மாவட்ட இணைப்புக் குழு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட பிரச்சினைதான். அப்போதே இது பற்றிய தெளிவுபடுத்தல்களை ஆட்சியாளர்கள் அல்லது உயர்மட்ட அதிகாரிகள் மக்களுக்குத் தெளிவாக வெளிப்படுத்தி இருந்தால் இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் சென்று இருக்காது என்று நினைக்கிறேன்.

தமது நிறுவனம் சட்டரீதியாகவே சுண்ணக்கல் வியாபாரத்தில் ஈடுபடுகின்றது என்று தெரிவித்து, தமது பக்க நியாயங்களை சம்பந்தப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்திய வர்த்தக நிறுவனம் நேற்று செய்தியாளர் மாநாட்டை கூட்டி விடயங்களை அறிவித்திருக்கிறது.

அவற்றை ஒட்டி சில விவரங்களை அதிகாரிகள் குறைந்தபட்சமாக மக்களுக்குத் தெளிவு படுத்தினால் நிலைமை ஒழுங்காகும் என்று நினைக்கிறேன்.

சம்பந்தப்பட்ட வர்த்தக நிறுவனப் பிரதிநிதி கூறியபடி வலி. வடக்கு மற்றும் வலி. கிழக்குப் பகுதிகளில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலங்களில் மீளவும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள், தமது நிலங்களில் துறைசார் திணைக்களங்களின் அனுமதி பெற்று, கனரக வாகனங்கள் கொண்டு, அனுமதி அளிக்கப்பட்ட வரையறைக்கு ஏற்ப சுண்ணக்கற்களை அகழ முடியும் என்றால் அந்த வரையறை என்ன? மூன்று அடிக்கு மேல் நிலத்தைத் தோண்டி சுண்ணக்கற்களை அகழ அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? மேற்படி வர்த்தக நிறுவனம் ஏற்றும் சுண்ணக்கற்கள் எந்த அளவு ஆழத்தில் அகழப்பட்டு பெறப்பட்டவை? இதில் ஒழுங்கு முறை மீறப்படவில்லை என்பதை வடக்கு அரச நிர்வாகம் உறுதிப்படுத்த முடியுமா?

அகழப்பட்ட கற்களை கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர்கள் வாங்கி, அவற்றை உடைத்த பின்னர் அவற்றை விற்பனை செய்கிறார்கள். அதனையே மேற்படி நிறுவன வாகனங்கள் ஏற்றிக் கொண்டு திருகோணமலைக்கு செல்லுகின்றன என்று கூறப்பட்டது. நல்லது.

இப்படி யாழ் மாவட்டத்தில் அகழப்பட்ட கற்களை மாவட்டத்திற்கு வெளியே எடுத்துச் செல்வதற்கு சட்டரீதியான அனுமதி தேவையா, தேவையில்லையா? யாரும் நினைத்தபடி அதனை எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாமா? நீதிமன்றம் வழங்கிய உத்தரவு அகழப்பட்ட கற்களை மாவட்டங்கள் தாண்டி கொண்டு செல்வதற்கான தடை இல்லை என்ற அடிப்படையில் வழங்கப்பட்டதா?

இவ்விவகாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அத்துமீறிச் செயல்பட்ட விடயம் ஒன்று. அடுத்தது – அதனைத் தவறு என்று சொல்லி சுண்ணக்கல் வியாபாரம் வடக்கின் கனியவள சொத்தை கண்மூடித்தனமாக வெளியிடங்களுக்கு கொண்டு செல்ல அனுமதிப்பதாக இருக்க முடியுமா என்பது.

சம்பந்தப்பட்டோர் – பிரதானமாக வடக்கு மாகாண ஆளுநர் – இது பற்றிய சட்ட நிலைமையைத் தெளிவாக சமூகத்துக்கு எடுத்துரைக்க வேண்டும். இது அவரது கடப்பாடு. அவர் செய்வாரா?

அவர் நிலைமையைத் தெளிவுபடுத்துவாராயின், இவ்விவகாரத்தில் தவறு நடக்கின்றதா, அது எங்கு இருக்கின்றது என்பது தானாக அம்பலமாகிவிடும்.

## யாழில் நிமோனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தந்தையே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 30ஆம் திகதி முதல் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு திடீரென உடல்நிலை மோசமடைந்ததால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்ப்பிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இவர் நிமோனியாக் காய்ச்சலால் உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

## ஊடகங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"கடந்த ஆட்சிக் காலங்களில் படுகொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம். நீதியை எதிர்பார்த்து அந்த ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் அனுபவிக்கும் வலி, வேதனை எமக்குத் தெரியும். எனவே, அவர்களின் நீதிக்கான வேண்டுதலை நாம் நிறைவேற்றியே தீருவோம்.

ஊடகங்களை அடக்கிக்கொண்டு ஆட்சியை முன்னெடுக்க முடியாது. அவ்வாறு செய்த அரசுகளுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும்." – என்றார்.

## உள்ளூராட்சி தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தேசித்துள்ளோம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதாயின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தை விரைவாகத் திருத்தம் செய்ய வேண்டும். எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து எதிர்வரும் வாரம் விசேட கலந்துரையாடலில் ஈடுபட உத்தேசித்துள்ளோம்." – என்றார்.

## எக்கெலிகொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுயாதீன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை குறித்த நீதிமன்ற வழக்கு விசாரணைகள் இன்னமும் நிறைவடையாத நிலையில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவுக்கு அமைவாக பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டார் என்று தன்னை முன்னாள் கடற்படை வீரர் என அடையாளப்படுத்தும் ஆர்.பி.டி.பி. பிரசன்ன பியசாந்த அண்மையில் 'சுதா கிரியேஷன்ஸ்' எனும் தனியார் யூடியூப் தளத்துக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இது குறித்து நீண்ட காலமாக நீதியைக் கோரி போராடி வரும் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவிடம் வினவியபோது, அவர் தான் அந்த நேர்காணலைப் பார்வையிடவில்லை எனப் பதிலளித்தார்.

"பிரகீத் எக்னெலிகொட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடந்த 2015 ஆம் ஆண்டின் பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மிகச் சிறப்பான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த விசாரணைகள் மீது எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. அவற்றின் அடிப்படையில் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. அவ்வாறிருக்கையில், அந்த வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தி, நீதியை நிலைநாட்டுமாறு அரசிடமும், உரிய அதிகாரிகளிடமும் என்னால் கோர முடியுமே தவிர வேறு எதனையும் செய்ய முடியாது." – என்றும் சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார்.

அத்தோடு கடந்த காலங்களில் தான் அரசிடமும், நீதிமன்றக் கட்டமைப்பின் ஊடாகவுமே நீதியைக் கோரி வந்திருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், தற்போதைய புதிய அரசின் மீது நம்பிக்கை வைத்து அவர்களிடமும் நீதியை விரைவாக நிலைநாட்டுமாறு கோருவதாகவும் குறிப்பிட்டார்.

## ஒன்றரை வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டத்தில் நேற்றுக் காலை நீரோடையில் வீழ்ந்து முருகேசு விகான் எனும் ஒன்றரை வயது ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

குறித்த நீர்நிலைக்கு அருகில் உள்ள வீட்டிலிருந்து குழந்தை தத்தி நடந்து வந்து நீரோடைக்குள் விளையாடிக் கொண்டிருந்தபோது நீருக்குள் வீழ்ந்துள்ளது.

குழந்தை மீட்கப்பட்டு பழுகாமம் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் இடைவழியில் உயிரிழந்துள்ளது.

பிரேத பரிசோதனைக்காகக் குழந்தையின் சடலம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பெற்றோரின் கவனயீனம், பிள்ளைகள் மீதான அக்கறையற்ற செயற்பாடுகளே இவ்வாறான சம்பவம் ஏற்படுவதற்குக் காரணம் என்று சமூகச் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.





# மாணவர்களிடையே புகையிலை சார்ந்த உற்பத்திகளின் பயன்பாடு அதிகரிப்பு

பாடசாலை மாணவர்களிடையே புகையிலை சார்ந்த உற்பத்திகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பல்வேறு வகையான சிகரெட்டுகளை மாணவர்கள் பாவிப்பது ஆபத்தானது என காலி தேசிய வைத்தியசாலையின் விசேட உளநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

அத்துடன். குறித்த மாணவர்களைப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அடுத்த 36 மணி நேரத்தில் பல பகுதிகளில் மழை



அடுத்துவரும் 36 மணி நேரத்தில் நாட்டின் பல பாகங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சபரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென் மாகாணத்திலும் இரத்தினபுரி மாவட்டத்தின் சில இடங்களிலும் சில இடங்களில் பலத்த மழை பெய்யக்கூடும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை அறிவித்தது.





# பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமர் ஆலோசனை



பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் அனைத்து பிரச்சினைகளையும் ஆராய்ந்து அவற்றைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

உயர்கல்விக்கென ஒதுக்கப்பட்ட நிதி உரியமுறையில் பயன்படுத்தப்படல் வேண்டும் எனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாமனிதர் குமார்

தலைவர் பிரபாகரனால் 'மாமனிதர்' என்று பட்டம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்ட குமார் பொன்னம்பலம் மறைந்து இன்றுடன் கால் நூற்றாண்டு கடக்கின்றது.

சிங்கள பேரினவாதிகளின் மைய நிலத்தில் நின்று கொண்டு ஈழத் தமிழர்களின் குரலை புலி உறுமலாக வெளியிட்டுக் கொண்டிருந்த ஒரு தேசப்பற்றாளர் குமார் பொன்னம்பலம்.

தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதிலும் தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாத செயல்களை அம்பலப்படுத்துவதிலும் துணிச்சலோடு முன் நின்றவர் அவர்.

சர்வதேச அரங்கிலும் நீதிமன்றங்களிலும் அவர் குரல் தமிழர் தேசத்துக்காக உறுதியோடு ஒலித்தது. நாடாளுமன்றத்தில் அந்தக் குரல் அதே இறுமாப்போடு ஒலிக்கும் வாய்ப்பு கிட்ட முன்னரே அது அடக்கப்பட்டு விட்டது.

அந்த வாய்ப்பு குறித்து அவரது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தற்போதைய பொதுச்செயலாளராக இருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்த ஒரு கருத்து இன்றைய நிலையில் நோக்கப்பட வேண்டியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாற்று ரீதியாகப் பிறப்பெடுத்த காலகட்டத்தில்தான் குமார் பொன்னம்பலம் கொழும்பில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

“தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாக பலம் பெற்றிருந்த சூழலில் சமாதான உடன்படிக்கை ஏற்படப் போகிறது என்ற நிலையில், குமார் பொன்னம்பலம் உயிரோடு இருந்தால் அவர் தான் தமிழர்களின் ஜனநாயக அரசியல் அணிக்கு தலைமைதாங்குவார் என்ற நிலை இருந்தது. அது விடுதலைப் புலிகளின் 30 வருட கால அரசியல் கோரிக்கையை ஒரு பயங்கரவாதக் கோரிக்கையாக சித்திரிக்க முடியாமல் போய்விடும், புலிகளையும் மக்களையும் பிரிக்க முடியாமல் போகும், விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி கைக்கூலிகளை தங்களுடைய தலைமைகளாகக் கொண்டுவர முடியாமல் போகும் என்ற ஒரு சூழலில் தான் குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டார்” என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

இராணுவ ரீதியில் பல வெற்றிகளை அடுக்கிக் கொண்டிருந்த விடுதலை புலிகளுக்குப் பின்னால் அணிதிரள்வதைத் தவிர தங்களுக்கு அரசியலில் நாதியில்லை என்ற உண்மையை உணர்ந்து பெரும்பாலான தமிழ் மிதவாத அரசியல் தலைவர்கள் தங்கள் பாதையை செப்பனிட தயாரான அந்தக் காலகட்டத்தில், புலிகளுக்கு மிக நெருக்கமானவராக - வேண்டப்பட்டவராக - மதிக்கப்பட்டவராக - நம்பிக்கைக்குரியவராக - இருந்த குமார் பொன்னம்பலம் கொழும்பிலிருந்து புலிகளுக்காக, அவர்களின் போராட்டத்தின் நியாயங்களுக்காக, குரல் எழுப்பி வந்த சூழலில் அவரே கூட்டமைப்பின் தலைவராக வருவதற்கான வாய்ப்புகள் தாராளமாக அப்போது இருந்தன என்பதை இப்போதும் மறுக்கமுடியாது. அத்தகையசூழலில் தான் புலிகளாலும் தலைவராலும் மதிக்கப்பட்ட ஒரு தலைவராக விளங்கிய குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது தமிழின உணர்வை - உறுதியை - சுதந்திர உணர்வை - அந்தப் படுகொலைப் பாதிப்புக்கும் பின்னடைவுக்குப் பின்னரும் அவரது கட்சியும் மகனும் தொடர்ந்து அதை விட அதீத பற்றுதியோடும் கொள்கைத் தெளிவோடும் தளராமலும், தளும்பாமலும் முன்னெடுப்பது அந்தப் பெருமனிதருக்குப் பெருமை சேர்க்கும் அணிகலன்களே!

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகளவு தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

"வடக்கு – கிழக்குப் பகுதிகளில், அதிகளவு தமிழ்ப் பொலிஸாரை நியமிப்பதற்கு சிறப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பொலிஸ் வெற்றிடங்கள் தமிழ்ப் பொலிஸாரை வைத்து மிக விரைவாக நிரப்பப்படும்."

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் மாகாண ஒருங்கிணைப்பு மையம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இலங்கையின் அனைத்துப் பகுதிகளைப் போலவே வடக்கிலும் எந்தவொரு அரசியல் தலையீடும் இல்லாமல் பொலிஸாரால் பணியாற்ற முடியும். கடந்த காலங்களைப் போல் அல்லாமல், பொலிஸாரின் சுதந்திரமான செயற்பாட்டை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

சட்டத்தின் அடிப்படையில் செயற்படுவதற்குப் பொலிஸாருக்கு முழுமையான சுதந்திரம் உண்டு. சட்டத்தின் அடிப்படையில் செயற்படும்போது உங்களுக்கு (பொலிஸாருக்கு) ஏதேனும் அழுத்தம் முன்வைக்கப்பட்டால், அது தொடர்பில் எனக்குத் தெரிவியுங்கள். நிச்சயம் நான் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வேன்.

தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் பகுதிகளில் தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு – கிழக்கில் இருந்து அதிகளவான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அத்துடன், வடக்கில் நிலவும் இதர பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்." – என்றார்.

# புத்திசிகாமணிக்குக் கலாபூஷணம் விருது



புத்தசாசன சமயங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கலாசார திணைக்களத்தின் 39 ஆவது அரச விருது விழாவில் நாடகத்துக்கான கலாபூஷணம் விருது சுப்பிரமணியம் புத்திசிகாமணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு, ஆழியவளை, கொடுக்கிளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட புத்திசிகாமணி, தற்போது யாழ். நகரில் வசித்து வருகின்றார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலராகவும், சாவகச்சேரி நகர சபையின் செயலராகவும் கடந்த காலங்களில் இவர் பதவி வகித்துள்ளார்.

இவர் பாடசாலைக் காலத்தில் பல சிறுவர் நாடகங்களிலும், பின்பு நாட்டுக்கூத்து சமூக நாடகங்களிலும் நடித்ததுடன் பல நாடகங்களை எழுதியும் அரங்கேற்றியுள்ளார்.



# தமிழரசின் தலைமை மாற்றத்தை எதிர்ப்பவர்கள் யார்?



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு தசாப்த காலத்தின் பின்னராக, தலைமைத்துவ மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது. பதில் தலைவராக சி.வி.கே.சிவஞானம் தெரிவாகியிருக்கிறார். ஏற்கனவே, ஐந்து ஆண்டுகளாக பதில் செயலாளரோடு இயங்கிக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சி, தலைமை மாற்றத்தையும் பதில் தலைவரைக் கொண்டு நிரப்பியிருக்கின்றது. கடந்த பொதுத் தேர்தல் காலத்தில், கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதாக மாவை சேனாதிராஜா, எழுதிய கடிதத்தை ஏற்றுக் கொண்டதாக கட்சியின் செயலாளர், அறிவித்தார். ஆனால், அந்த நிர்வாக நடவடிக்கைக்குப் பின்னராகவும், தானே தொடர்ந்தும் தலைவராக செயற்படுவதாக மாவை அறிவித்த நிலையில், கட்சியின் மத்திய குழு, மாவையின் பதவி விலகலை ஏகமனதாக அங்கீகரித்து அதிகாரத்தில் இருந்து அகற்றியிருக்கின்றது. இப்போது, அவருக்கு அரசியல் குழு தலைமைப் பதவி வழங்கப்பட்டிருக்கின்றது. நிர்வாக ரீதியில் அது அதிகாரங்கள் அற்ற ஒப்புக்கான பதவி. 'புலி வருகிறது.... புலி வருகிறது...' கதையாக கடந்த பத்து ஆண்டுகளில் மாவை ஏற்கனவே சில தடவைகள், தான் கட்சித் தலைமைப் பதவியை விட்டு விலகுவதாக கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால், அந்தக் கடிதங்களை ஒருசில நாள்களில் அவர், மீளப்பெற்றும் இருக்கிறார். அப்போதெல்லாம், அது பேசுபொருளும் ஆகியதில்லை. ஆனால், இம்முறை அவரது பதவி விலகல் கடிதம் செயலாளருக்கு அனுப்பப்படுவதற்கு முன்னரே, ஊடகங்களில் வெளியானது. அது, கட்சியின் தேர்தல் நடவடிக்கைகளில் கணிசமான பின்னடைவை ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அந்த நிலையில்தான், அவரது பதவி விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. தொடர்ச்சியாக ஏமாற்று நாடகத்தை ஆடினால், ஒரு நாள் அந்த நாடகத்துக்குள் சிக்கி சீரழிய வேண்டும் என்பதற்கு ஆறு தசாப்த காலத்துக்கும் மேலான அரசியல் அனுபவமுள்ள மாவையும் இன்னொரு உதாரணம் ஆகியிருக்கிறார்.

மாவை கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து மாற்றப்பட வேண்டும் என்பது தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்த கோரிக்கை. அதனால், அவரின் மாற்றம் தொடர்பில் பெரிய எதிர்ப்புக்கள் ஏதும் கட்சிக்குள் இல்லை. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இடைநிறுத்தப்பட்ட மத்திய குழு உறுப்பினருமான வைத்தியர் சிவமோகன் மாத்திரமே, மாவைக்காக குரலை உயர்த்தியிருக்கிறார். நீதிமன்றத்தையும் நாடியிருக்கிறார். ஆனால், தமிழரசுக் கட்சிக்கு வெளியில் இருக்கும் தரப்புக்கள் சில மாவையின் தலைமைத்துவ மாற்றத்தை கொஞ்சமும் ரசிக்கவில்லை. அதிலும், பதில் தலைவராக சிவஞானம் நியமிக்கப்பட்டதை பெரும் எரிச்சலோடு நோக்குகின்றன. குறிப்பாக, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் செயலாளரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ மாற்றத்தை விமர்சித்திருக்கிறார். அத்தோடு, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற விடயத்தை ஏந்தி வந்த தரப்புக்களின் பொதுக் கட்டமைப்பின் சார்பில் கைச்சாத்திட்ட அரசியல் பத்தியாளர்கள் சிலரும் மாவை அகற்றப்பட்டமையை எதிர்க்கிறார்கள். அந்த எதிர்ப்பு எது சார்ந்தது என்பது வெளிப்படையானது. தமிழரசுக் கட்சி எந்தவொரு தருணத்திலும் செயற்பாட்டுத் திறனுள்ள தலைமையிடம் சென்றுவிடக் கூடாது என்ற நோக்கங்களைக் கொண்டது. கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்துக்குள் இருந்து மாத்திரம் அரசியல் செய்யும் தரப்புக்களின் (குறிப்பாக தமிழரசுக் கட்சிக்கு

தொடர்ச்சி▼

# தமிழரசின் தலைமை மாற்றத்தை எதிர்ப்பவர்கள் யார்?

தொடர்ச்சி▲

எதிரான தரப்புக்களின்) இழுப்புக்களுக்கு எல்லாமும் மாவை இழுபட்டுத் திரிந்தார். தமிழரசுக் கட்சியை தமிழ்த் தேசிய விரோத சக்தியாக மேடைகளில் பேசியும், ஊடகங்களில் எழுதிக் கொண்டும் தங்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலை மாவையைக் கொண்டு தமிழரசுக் கட்சிக்குள்ளும் முன்னெடுக்க முடியும் என்று அந்தத் தரப்பினர் நம்பினார்கள். அதனைச் செய்தும் வந்தார்கள். தமிழ்ப் பொதுக் கட்டமைப்பும், அதன் ஜனாதிபதி தேர்தல் கால நாடகத்திலும் மாவையும் உதிரிப் பாத்திரமாக ஆடித் தொலைத்தார். அடிப்படைகள், தூரநோக்குகள் அற்ற அரசியல் விளையாட்டுக்களை சிவஞானம் கடந்த காலங்களில் வெளிப்படையாக எதிர்த்து வந்திருக்கிறார்.



அப்படியான நிலையில், மாவையைக் கையாண்டது போல, சிவஞானத்தைக் கையாள முடியாது என்ற கோபமும் எரிச்சலும் தமிழரசுக் கட்சியின் நிர்வாக விடயங்கள் தொடர்பில் கஜேந்திரகுமாரும், அவரின் கடந்த கால ஆலோசகர்களும் (சில பத்தியாளர்கள்) விமர்சிக்கும் அளவுக்கு வந்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய அரசியலில் இயங்கிக் கொண்டிருக்கும் கட்சிகளில் தமிழரசுக் கட்சி மாத்திரமே, ஜனநாயகத் தன்மையைப் பேணுகின்ற ஒரே கட்சி. தமிழரசுக் கட்சிக்கு முன்னால் தோன்றிய காங்கிரஸ், அது ஆரம்பித்தது முதல் குடும்பக் கட்சி. ஆயுதப் போராட்ட இயக்கங்களாக தோன்றி, கால ஓட்டத்தில் அரசியல் கட்சிகளாகிவிட்ட கட்சிகளும் வாழ்நாள் தலைவர்களை மாத்திரம் கொண்டிருக்கின்றது. அங்கு, கட்சி தலைவர்களை கேள்விக்குட்படுத்தும் அதிகாரம் என்பது, கட்சிக்கு கிடையாது. ஆனால், தமிழரசுக் கட்சிக்குள் நிறைய குழப்பங்களும் குளறுபடிகளும் இருந்தாலும் தங்களுக்கான நீதிக்காக போராடும் ஜனநாயகத்தை அந்தக் கட்சியின் யாப்பு உறுப்பினர்களுக்கு வழங்குகின்றது. அதனை ஒரு நடைமுறையாகவே இவ்வளவு காலமும் அந்தக் கட்சி கொண்டுமிருக்கின்றது. அதனால்தான், அந்தக் கட்சி இவ்வளவு வழக்குகளை நீதிமன்றங்களில் எதிர்கொண்டும் நிற்கின்றது. அப்படியான நிலையில், தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ மாற்றம் அல்லது நிர்வாக நடைமுறைகள் தொடர்பில் கஜேந்திரகுமார் விமர்சிப்பதெல்லாம் அபத்தமானது. உட்கட்சிக்குள்ளேயே எதிர்க்கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாத கஜேந்திரகுமார், அதனை காரணமாகக் காட்டி 2020 பொதுத் தேர்தல் முடிந்த கையோடு மணிவண்ணனையும், அவரது ஆதரவு குழுவினரையும் கட்சியை விட்டு தூக்கி எறிந்தமை எல்லாமும் வரலாறு. அது தொடர்பில் தமிழரசுக் கட்சியோ, அதன் முக்கியஸ்தர்களோ ஒருபோதும் கருத்துக் கூறவில்லை. அதனை ஒரு கட்சியின் உள்விவகாரமாக கடந்து விட்டார்கள். ஆனால், தலைமைப் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்த மாவையின், பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்டு, கட்சி நிர்வாக நடவடிக்கைகள் எடுத்ததையெல்லாம் விமர்சிப்பதை எப்படி ஆரோக்கியமான விமர்சனம் என்று கொள்ள முடியும். கட்சி ஆரம்பித்தது முதல் முன்னணியின் தலைமைப் பதவியில் இருக்கும் கஜேந்திரகுமார், அவரது குடும்பக் கட்சியான காங்கிரஸின் அதிகாரம் பொருந்திய செயலாளர் பதவியை எப்போதாவது, தங்களின் குடும்ப உறுப்பினர்களைத் தாண்டி வேறொருவருக்கு வழங்கிய வரலாறு உண்டா என்பதையும் ஊடகங்களில் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியலில் தமிழரசுக் கட்சிதான் இப்போதும் தலைமைக் கட்சி. ஏனையை கட்சிகள் எல்லாமும் சில பிரதேசங்களுக்குள் சுருங்கிவிட்ட உதிரிக் கட்சிகள். காங்கிரஸ், யாழ்ப்பாணத்தைத் தாண்டி ஒருபோதும் வெளிவரவில்லை. கிளிநொச்சி மாவட்டத்திலேயே ஐந்து வீதத்துக்கும் குறைவாக வாக்குகளைப் பெற்ற கட்சி. கிழக்கு மாகாணத்தில் அந்தக் கட்சி இரண்டு வீத வாக்குகளையே பெறவில்லை. அப்படியான நிலையில், வடக்கு கிழக்குப் பூராவும் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற கட்சியொன்று தொடர்பில், அதன் நிர்வாக நடைமுறைகள் தொடர்பில் கஜேந்திரகுமார் கருத்து வெளியிடுவது அவசியமற்றது. கூட்டமைப்பில் இருந்து முதலில் வெளியேறிச் சென்ற கஜேந்திரகுமார், முன்னணியை தோற்றுவித்தது முதல் கடந்த பதினைந்து ஆண்டுகளில் தமிழரசுக் கட்சியையும், அதன் தலைமைத்துவத்தில் இருந்து வந்த இரா. சம்பந்தன், மாவை உள்ளிட்டவர்களை தமிழின துரோகிகளாகவே சித்திரித்து அரசியல் செய்து வந்திருக்கிறார். கடந்த பொதுத் தேர்தலிலும் தமிழரசுக் கட்சியையே அரசியல் எதிரியாக காட்டி வாக்குக் கேட்டார். ஆனால், தேர்தல் முடிவுகள் வழங்கிய பாடம், அவருக்கு புதிய படிப்பினைகளை வழங்கியிருக்கலாம். அதனால்தான், கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் என்பதுபோல, தமிழ்த் தேசிய அரசியலில் தலைமைக் கட்சி, தமிழரசுதான் என்ற கட்டத்துக்கு வந்திருக்கிறார். ஆனால், அது உண்மையிலேயே ஆழ்மனதில் வந்திருக்கும் வார்த்தைகள்தானா என்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில், தமிழரசுக் கட்சிக்குள் தன்னால் கையாளக் கூடியவர்கள் அதிகாரத்தில் இருந்தால், தமிழ்த் தேசிய அரசியலின் பிரதான தலைவராக தன்னால் எழுந்துவர முடியும் அல்லது கூட்டமைப்பு போன்ற ஒன்றை மீண்டும் கட்டி, அதன் தலைமைத்துவ பீடத்தை அடையும் எதிர்பார்ப்பு ஏதாவது அவரிடம் இருக்கிறதா தெரியவில்லை.

தமிழ்த் தேசிய அரசியலில் கடந்த காலங்களில்

தொடர்ச்சி▼

# தமிழரசின் தலைமை மாற்றத்தை
# எதிர்ப்பவர்கள் யார்?

தொடர்ச்சி▲

எந்தவித கூட்டுச் செயற்பாடுகளுக்கும் இணங்காத கஜேந்திரகுமார் இப்போது, சிவஞானம் சிறீதரன் வீடு தேடிச் சென்று சந்திக்கிறார். அதுமாத்திரமின்றி, மன்னாருக்குச் சென்று செல்வம் அடைக்கலநாதனைச் சந்திக்கிறார். இந்த மாற்றங்கள், உண்மையிலேயே, தமிழ்த் தேசிய அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டத்தை கண்டடையும் நோக்கத்தை மாத்திரம் கொண்டதா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது. உண்மையிலேயே, தீர்வுத் திட்டத்திற்காக தமிழரசுக் கட்சியோடு இணைந்து செயற்பட வேண்டும் என்கிற நோக்கம் இருந்தால், அந்தக் கட்சியின் நிர்வாக விடயங்கள் தொடர்பில் விமர்சனங்களை வெளியிடுவது அபத்தமானது. ஏனெனில், தமிழரசுக் கட்சியின் முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அந்தக் கட்சியின் மத்திய குழுவுக்கு உண்டு. மத்திய குழுவின் முடிவுக்கு மாறாக அரசியல் தீர்மானங்களை அந்தக் கட்சி ஒருபோதும் எடுத்ததில்லை. கடந்த காலத்தில், குறிப்பாக சம்பந்தன் காலத்திலேயே, சம்பந்தன் – சுமந்திரன் இணை முடிவுகளை எடுப்பதாக சொல்லப்பட்டாலும், அந்த முடிவுகளை மத்திய குழு அங்கீகரித்து வந்திருக்கின்றது. கட்சியின் மத்திய குழு அங்கீகரிக்காத எந்த முடிவுகளையும், அரசியல் முடிவுகளாக சம்பந்தன் அறிவித்தது இல்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் தலைவரான மாவை தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று முரண்டு பிடித்தாலும், மத்திய குழு சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்தது. அதற்குத்தான் அரசியல் அதிகாரம் இருந்தது. அந்த முடிவுகளுக்கு மாறாக, மாற்று தேர்தல் மேடைகளில் ஏறியவர்கள் இப்போது, சிக்கல்களை எதிர்கொண்டு நிற்கிறார்கள். அப்படியான நிலையில், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை வைத்து விடயங்களை கையாண்டுவிட முடியும் என்ற நோக்கில், கஜேந்திரகுமாரோ அல்லது யாழ்ப்பாணத்து அரசியல் பத்தியாளர்கள் சிலரோ நினைத்தால், அது அவர்கள் கடந்த காலங்களில் முட்டுச் சந்துகளுக்குள் மாட்டிக் கொண்ட விளைவுகளையே வழங்கும். முதலில், தமிழரசுக் கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணையை புரிந்து கொள்ள வேண்டும். அந்தக் கட்சியின் அரசியல் தீர்மானங்களுக்கு மக்கள் தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆதரவு நிலையை புரியாது விடயங்களை கடக்க முடியாது. அதனால், கூட்டுச் செயற்பாடு என்பது தனித் தலைவர்களின், நாடாளுமன்ற உறுப்பினர்களின் முடிவுகள் சார்ந்தது மாத்திரம் இல்லை. இன்றைக்கு தமிழரசுக் கட்சியைப் புறந்தள்ளி யாரினாலும் அரசியல் தீர்மானங்களை மக்களின் சார்பில் எடுக்க முடியாது. அதனைப் புரிந்து கொண்டு இயங்கியாக வேண்டும். அதற்கு, எடுத்தோம் கவிழ்த்தோம் என்று கருத்துக்களை வெளியிட வேண்டியதும் இல்லை.

இன்னொரு பக்கம், தமிழரசுக் கட்சியையும், சம்பந்தன் – சுமந்திரன் தரப்பினரையும் தொடர்ச்சியாக விமர்சித்து வந்தவர்களுக்கு, இப்போது அதனைச் செய்யாமல் இருப்பது பெரும் மனநெருக்கடியானது. ஏனெனில், யாழ்ப்பாணத்துக்குள் எல்லோருக்கும் முகத்தில் அறையும் அளவுக்கு தேசிய மக்கள் சக்தி முன்னோக்கி வந்திருக்கின்றது. அதிலும், தமிழ்த் தேசிய வாக்குகளை ஒருங்கிணைக்கப் போவதாக ஆக்ரோசமாக அறிவித்த தரப்பினரின் தங்களுக்குள்ளேயே சில நாள்களுக்குள் பல துண்டுகளாக உடைந்து ஒருவரை ஒருவர் தூற்றிக் கொள்ளும் அரசியலைச் செய்தார்கள். அவர்களின் தோல்வியும் தான், தேசிய மக்கள் சக்திக்கான வெற்றியை வடக்கு மாகாணத்திற்குள் சாத்தியப்படுத்தியது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அவர்கள், பொது வேட்பாளர் என்ற விடயத்தை தூக்காமல் இருந்திருந்தால், தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியோடு அல்லது தமிழ்த் தேசியக் கட்சிகளோடு கணிசமாக இருந்திருப்பார்கள். அதன் மூலம், தமிழரசுக் கட்சியோ அல்லது இன்னொரு தமிழ்த் தேசியக் கட்சியோ மேலதிக ஆசனங்களைப் பெற்றிருக்கும். அதனை நாசமாக்கித் தொலைத்தனர், யாழ்ப்பாணத்து அரசியல் பத்தியாளர்கள். தமிழ்ப் பொது வேட்பாளருக்காக ஒருங்கிணைந்த



தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசனின் மொழியில் சொல்வதாக இருந்தால், "தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் சாதனை என்னவென்றால், தமிழரசுக் கட்சியின் அனுமதியின்றி பா.அரியநேத்திரனை, ஜனாதிபதி வேட்பாளராக்கி அதன் மூலம் அவரை கட்சியில் இருந்து வெளியேற்றியதும், ஜனாதிபதித் தேர்தல் கால கணக்கு வழக்குச் சட்டச் சிக்கல்களுக்குள் அவரைச் தள்ள வைத்ததுமே...." என்பது.

யாரும் அரசியல் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர். ஆனால், ஒரு கட்சி தன்னை செயற்பாட்டு நிலைக்குள் தொடர்ந்தும் தக்க வைப்பதற்காக போராடுவதும், அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதையும் தங்களின் தனிப்பட்ட நலன்கள் சார்ந்து விமர்சிக்கும் போது, அது அரசியல் அபத்தங்களாவே முடியும். கடந்த பத்து ஆண்டுகளில் மாவையின் தலைமைத்துவத்தில் கட்சி பாரிய பின்னடைவைச் சந்தித்திருப்பதாக, தமிழரசுக் கட்சி நம்புகின்றது. அதனை மாற்றுவதற்கு ஐந்து ஆண்டுகளுக்குள் முதலில் இருந்து முயன்று இப்போது, அது நிகழ்ந்திருக்கின்றது. அதனை அதன் போக்கில் சற்று அனுமதித்து விமர்சிப்பதுதன் நல்லது. அதுதான், அடுத்து வரும் தேர்தல்களிலாவது கவனக்கலைப்பான்களின் பின்னால், செல்லும் தமிழ் வாக்குகளை மீண்டும் தமிழ்த் தேசியக் கட்சிகள் பக்கத்துக்கு இழுப்பதற்கு உதவும். ■



# தூய்மைப்படுத்தல் சாத்தியமா?



வி.எஸ்.சிவகரன்

மூன்றாம் மண்டல நாடுகளிலே அரசியல் செல்வாக்கும் பக்க சார்பும் இயல்பான ஒன்றாகவே காணப்படுகின்றன. அதனாலே தான் ஊழல் தோற்றம் பெறுகிறது. நாட்டில் நிர்வாக ரீதியான முறைமை சீராக இல்லாத காரணத்தினாலும் ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகளாக காணப்படுவதாலும் இந்த நிலைமை இயல்பாகவே காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக தென்கிழக்கு ஆசியாவில் ஊழல் என்பது சர்வசாதாரணமான ஒன்றாகவே உள்ளது. அதற்கு இந்தியாவே பிரதான தலைமைப் பாத்திரம் வகிக்கிறது. அங்கு இலஞ்சம் இல்லாமல் எந்த வேலையும் செய்ய முடியாது என்கின்ற அளவில் கட்டமைக்கப்பட்டதாகவே ஊழல் காணப்படுகிறது.

ஆட்சியாளர்கள் தமது அரசியல் கட்சியை வளர்ப்பதற்காக – தமது கட்சிக்காரர்கள் தொடர்ந்து அரசியலில் நிலைப்பதற்காக – முறைகேடான விதத்தில் சொத்து சேகரிப்பதும் அதனை பாதுகாப்பதுமே ஊழலின் அடிப்படையாக காணப்படுகிறது. இதே வழிமுறையை பயன்படுத்தி அரசு திணைக்களங்களும் அரச ஊழியர்களும் ஊழல், பக்கச்சார்பு போன்ற செயற்பாடுகளில் சர்வ சாதாரணமாகவே ஈடுபடுகின்றனர். தாம் தவறு செய்கிறோம் என்பதனை உணர்ந்தும் உணராதவர்களாய் இலஞ்சம் வாங்குகிறார்கள். இலங்கையிலே இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் தலைவரே இலஞ்சம் வாங்கி அகப்பட்ட சம்பவங்களும் உண்டு.

அரச ஊழியர்கள் பகிரங்கமாக இலஞ்சம் பெறுவதற்கு பிரதான காரணம் அரசியல்வாதிகளே. இவர்கள் ஊடாக அவர்களுக்கும் உரிய பங்கு போவதனால் கூட்டுக் களவொ பாதுகாத்து வருகிறார்கள். உண்மை, நீதி, நேர்மை, சத்தியம், அறம், சமத்துவம் சமநீதி, சமூக நீதி, பேசக்கூடியவர்கள் அதிகாரிகளாக நின்று நிலைக்கவும் முடியாது, ஏனைய அதிகாரிகளோடு

தொடர்ச்சி▼

# தூய்மைப்படுத்தல் சாத்தியமா?



தொடர்ச்சி▲

பணி செய்யவும் முடியாது.

ஊழல் இல்லாத திணைக்களம் இலங்கையில் எது என்கின்ற அளவுக்கு தற்போது ஊழல் மலிந்து விட்டது. அதனைக் கட்டுப்படுத்த கூடிய அளவில் கடந்த 70 ஆண்டுகளாக ஆட்சிக்கு வந்தவர்கள் முனையவில்லை. தற்போதைய ஆட்சியினரும் ஊழலை ஒழிக்கப் போகிறோம் எனச் சொல்கிறார்கள். ஆனால் அதனை அவர்களால் ஒழிக்க முடியுமா என்பது கேள்விக் குறியே. ஏனெனில் பல தசாப்தமாக ஊழலில் ஈடுபட்டு வந்தவர்கள் உடனடியாக அதிலிருந்து விடுபடுவது என்பது சர்வசாதாரண விடயம் அல்ல. இந்த ஊழலுக்கு அரச ஊழியர்கள் அரசியல்வாதிகளுக்கு ஒத்துழைத்து, பின்னாளில் அரச ஊழியர்களும் ஊழல் வாதிகளாக மாறிவிடுகிறார்கள்.

இந்த நாடு இவ்வளவு மோசமான பொருளாதார பலவீனத்திற்கு காரணம் அரச ஊழியர்களே. அவர்கள் அரசியல்வாதிகளுக்கு ஏற்ற போல் பக்கச்சார்பாக பணியாற்றியதின் விளைவு காலத்துக்கு காலம் வரும் ஆட்சியாளர்களுக்கு தாளம் போட்டு முறையற்ற பொருளாதாரக் கொள்கையை உருவாக்குவதற்கு வழி வகுத்து, இன்று இந்த நிலையை எட்ட வைத்திருக்கின்றது.

அரச நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களோ அல்லது கல்வி நிர்வாக சேவையை சேர்ந்தவர்களோ கணக்கியல் நிர்வாக சேவையை சேர்ந்தவர்களோ எந்தத் துறையாக இருந்தாலும் அந்தத் துறையில் உள்ளவர்கள் அரசியல்வாதிகளுக்கு ஏற்ற போல் இல்லாமல் நாட்டினுடைய நியதிக்கு உட்பட்டு, நீதியாக பணி செய்தால் அரசியல்வாதிகளால் எதுவும் செய்து விட முடியாது.

ஒருவர் ஊழலுக்கும் பக்கச் சார்புக்கும் பொருத்தமுடையவர் அல்லர் என அரசியல்வாதிகள் கண்டு கொள்கிற போது அவரை மாற்றி விட்டு அதே இடத்திற்கு இன்னும் ஒருவரை கொண்டு வந்து நியமிக்கிறார்கள். அவ்வாறு நியமனம் பெறுகின்ற போது அந்த இடத்துக்கு நான் போகமாட்டேன் என இந்தத் துறை சார்ந்தவர்கள் ஒரே முடிவுக்கு வந்துவிட்டால் இந்த நாட்டிலே அரசியல் சார்பு என்கின்ற ஒன்றும் ஊழலும் இல்லாமல் போய்விடும்.

"அண்ணன் எப்ப போவான் திண்ணை எப்ப காலியாகும்" என்கின்ற வகையில் தான் இந்த

தொடர்ச்சி▼

# தூய்மைப்படுத்தல் சாத்தியமா?

**தொடர்ச்சி▲**

அதிகாரிகள் ஒருவரை ஒருவர் தள்ளிவிட்டு அதில் போய் தாங்கள் அமரக் காத்திருக்கிறார்கள். ஆகவே இவர்கள் அந்த அறத்தை பற்றி எங்கே யோசிக்க போகிறார்கள்?, தங்கள் சேவை காலத்தில் எவ்வளவு சொத்துச் சேர்க்க முடியுமோ அவ்வளவுக்கு திருடலாம் என்பதில் தான் இன்றைய அரச உத்தியோகமாகவுள்ளது.

ஆட்சியாளர்கள் "கிளீன் சிறிலங்கா" என்கிறார்கள். அது எவ்வளவு தூரம் கிளீன் பண்ண முடியுமோ தெரியவில்லை. சூழலை கிளீன் பண்ண போகிறார்களா? நிர்வாகத்தை கிளீன் பண்ண போகிறார்களா? அல்லது ஆட்சியாளர்களின், அரச ஊழியர்களின் மனங்களை தூய்மைப்படுத்தப் போகிறார்களா? தெரியவில்லை. எது, எப்படி என்றாலும் இலகுவாக இவர்கள் எவரையும் தூய்மைப் படுத்தி விட முடியாது. இலங்கையிலே வருமானம் தரக்கூடிய அரச திணைக்களங்கள் அதிகமாக ஊழலில் மிதக்கின்றன. புவிச் சரியதவியல் திணைக்களம், சுங்கத் திணைக்களம், காணி தொடர்புடைய திணைக்களம், உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பல உட்பிரிவுகள், பொலீஸ் திணைக்களம், வனத்திணைக்களம், கல்வித் திணைக்களத்தில் சில பகுதிகள், நீர் பாசனத்திணைக்களம், காணி சீர்திருத்த ஆணைக்குழு உட்பட பல ஆணை குழுக்கள், கூட்டுறவுத்திணைக்களம், விவசாயத் துறை சார்ந்த திணைக்களங்கள், கடலியல் துறை சார்ந்த திணைக்களங்கள், வீதி அபிவிருத்தி சார்ந்த திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்களில் சில பிரிவுகள், இத்திணைக்களங்கள் மட்டுமன்றி இலங்கையில் உள்ள சகல நிர்வாக செயல்பாடுகளிலும் ஊழல் பக்கச்சார்பு என்பது எழுதப்படாத விதியாகவே மாறியுள்ளது.

இலஞ்சம் வழங்காவிட்டால் வேலை விரைவாக நடைபெறாது. சில வேலைகள் முற்றாகவே முன்நகரக்கூடியஎந்தவாய்ப்பும்இல்லை. இந்த விடயத்தை தொடர்ந்து ஜனாதிபதியும், பிரதமரும் கூறி வருகிறார்கள். வடக்கு ஆளுநரும் அவ்வப்போது கூறி வருகிறார். ஆனால் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு எதிர்க்கட்சிக் காரர்கள் போல் பேசுவதில் அர்த்தம் இல்லை. பக்கச்சார்பையும் இலஞ்சத்தையும் பணியில் அசட்டையீனத்தையும் இல்லாமல் செய்வதே சாமானிய மக்களுக்கு செய்யும் மிகப் பெரும் நற்செயல் ஆகும்.

வல்லோன் மட்டுமே வாழலாம். வலியோனுக்கு அதிகாரவர்க்கத்துக்கு முன்பு இடமில்லாமல் அடிபணிந்தே ஆக வேண்டும் என்கின்ற விதியை எவர் மாற்றப் போகிறார்கள்? ஊழலையும் பக்கச்சார்பையும் புறக்கணிப்பையும் முற்றாக நாட்டில் இருந்து அகற்றி விட முடியுமா என்பது மிகப்பெரிய கேள்விக்குறியே.

இந்த அரசே பல ஊழல்வாதிகளை அதிகாரத்துக்கு நியமனம் செய்கிறது. இன்னும் சிலரை பதவியில் தொடரவும் அனுமதித்திருக்கிறது. அப்படியானால் இவர்களால் எப்படி ஊழலை ஒழிக்க முடியும்?

இலங்கையில் ஊழல் ஒழிப்பு என்பது சாத்தியமா? ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாக முறைமைக்குள் நேர் சீராக செயல்படாமல் பல தசாப்தங்களாக ஊழலிலும் பக்க சார்பிலும் ஈடுபட்டவர்களை நள்ளிரவில் கிளீன் சிறிலங்கா மூலம் மாற்ற முனைவது என்பது கடலில் மழை பெய்வதற்கு ஒப்பானது.

இலங்கையிலே வருமான வரித் திணைக்களமும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவும் சீராக செயல்பட்டால் ஓரளவுக்கேனும் ஊழலை குறைக்க முடியும்.

அரசு அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் அவர்கள் பினாமிகள் பெயரிலும் உள்ள சொத்துக்கள் எப்படி வந்தன என்பதனை ஆராய வேண்டும். அதே போல் கறுப்பு வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களையும் கிரமமாக கண்காணிக்க வேண்டும். பொலீஸ் திணைக்களம் நேர்மையாக செயல்பட்டாலே நாட்டிலே பல பிரச்சினைகளை இயல்பாகத் தீர்த்து விட முடியும். பக்கச்சார்பிம் அரசியல் செல்வாக்கும் பொலிஸ் திணைக்களத்தின் மரபாகிவிட்டன. அரச சுற்று நிரூபங்களும், சத்தியப் பிரமாணங்களும் வெறும் போலி விம்பங்களே.

நாட்டிலே அதிகளவான காணிப் பிணக்குக்களுக்கு சில சட்டத்தரணிகளேபிரதானகாரணம். ஒருகாணிக்கு பல உறுதிகளை எழுதுவதும் முறைகேடான பத்திரங்கள் தயாரிப்பதும் ஆட்சிமுதுச உறுதிகளை உருவாக்குவதாலுமே பலர் நீதி மன்றங்களில் அலைகிறார்கள். அங்கு போனாலும் இவர்களுக்கு கொண்டாட்டம். சாமானியனுக்கோ இவர்கள் அதிகாரத்தால் ஒரே திண்டாட்டம். நீதி என்பது உரிமை மறுக்கப்பட்டவனுக்கும் பாதிக்கப் பட்டவன் பக்கம் நிற்பதே. இன்றைய வணிகச் சந்தை சமூகத்தில் இது சாத்தியமா?

தற்போதைய கல்வி என்பது மக்களை ஏமாற்றுவதற்கும் சாமானியர்களுக்கு புரியாத மொழியில் பதில் சொல்வதற்குமே பயன்படுகிறது. அதிகம் படித்தவர்கள் என்று சொல்பவர்கள் மிகக் கீழ்த்தரமான நிர்வாக முறை கேட்டாலும் மோசடியிலும் ஈடுபடுகிறார்கள். அறிவு அதிகரிக்க, ஊழலும் உச்சம் பெறுகிறது. ஒழுக்கத்தை உருவாக்க வேண்டிய கல்வி சமூகப் பிறழ்வுக்கு வழி கோலுகிறது என்பதே மறுக்க முடியாத உண்மை.

அதிகாரிகள் இலஞ்சம் பெற முடியாதவர்கள் இடத்தில் மக்களை உண்மைக்கு மாறான சட்ட வியாக்கியானங்களை கூறி ஏமாற்றி வருகிறார்கள் அது மாத்திரமன்றி தங்களுடைய குடும்ப சொத்து போல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதையும் தனிப்பட்ட முறையில் பழி வாங்குவதையும் நியாயம் கேட்பவர்களுக்கு அநியாயத்தை ஏற்படுத்துவதையும் சட்டத்தின் நிர்வாக திறனை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பை விடுத்து தமது அதிகாரத்துக்கு உட்பட்டே விடயங்களை காழ்ப்புணர்வுடன் அணுகுவதுமே இன்றைய நிர்வாக இயலின் உச்சபட்ச மோசடி. நீதி இவர்களிடத்தில் சிக்கித் தவிக்கிறது. ஊழலும் பக்கச் சார்பும் அதிகார மேட்டிமைத்தனமும், பழி வாங்குதலையும் ஒழிக்க முடியுமா? அல்லது இவர்கள் எல்லோரும் சேர்ந்து அரசை ஒழித்து விடுவார்களோ தெரியவில்லை.

# கிராம மக்களுக்கு கண்ணியமான வாழ்க்கையினை வழங்குவோம்

## பிரதமர் மோடி தெரிவிப்பு

கிராமங்களில் உள்ள மக்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை வழங்குவதே தனது அரசின் முன்னுரிமை என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கிராமப்புற இந்தியா திருவிழா 2025ஐ பிரதமர் நரேந்திர மோடி புதுடில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நேற்று தொடங்கி வைத்தார். கிராமப்புற இந்தியாவின் தொழில்முனைவோரின் உற்சாகம் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தைக் கொண்டாடும் வகையில், இத் திருவிழா 9 ஆம் திகதி வரை 'வளர்ச்சியடைந்த பாரதம்-2047-க்காக நெகிழ்வுத்தன்மையுடன் கொண்ட கிராமப்புற இந்தியாவை உருவாக்குதல்' என்ற கருப்பொருளுடன் நடைபெறுகிறது.

இத்திருவிழாவை தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி,

"கிராமங்களை வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளின் துடிப்பான மையங்களாக மாற்றுவதன் மூலம் கிராமப்புற இந்தியாவை மேம்படுத்துவதே எங்கள் நோக்கம். கடின உழைப்பு இருந்தபோதிலும், குறைந்த வளங்கள் காரணமாக கிராம மக்கள் பெரும்பாலும் வாய்ப்புகளை அணுக போராடுகிறார்கள்.

2014 முதல், ஒவ்வொரு கணமும் கிராமப்புற இந்தியாவுக்குச் சேவை செய்வதில் தொடர்ந்து பணியாற்றி வருகிறேன். கிராமங்களில் உள்ள மக்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை வழங்குவதே எனது அரசின் முன்னுரிமை. கிராமப்புற இந்தியாவில் உள்ள மக்களுக்கு அதிகாரம் அளிப்பது, முன்னேறுவதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவது, இடம்பெயர்வதைத் தடுப்பது மற்றும் அவர்களின் வாழ்க்கையை எளிதாக்குவது என்பதே எங்கள் பார்வை.



இதை அடைய, ஒவ்வொரு கிராமத்திலும் அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்தும் செயல்திட்டத்தை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இந்தியாவின் கிராம மக்கள் அதிகாரம் பெற வேண்டும், கிராமத்திலேயே முன்னேற அதிக வாய்ப்புகள் கிடைக்க வேண்டும். கிராமத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் சிறப்புக் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன."- என்றார்.

# விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலியானோரின் குடும்பங்களுக்கு 4 லட்சம் ரூபா

விருதுநகர் அருகே பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்த 6 தொழிலாளர்களின் குடும்பத்திற்கு தலா 4 லட்சம் ரூபா நிவாரணம் வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்திரவிட்டுள்ளார்.



விருதுநகர் மாவட்டம் கோட்டையூர் கிராமத்தில் செயல்பட்டுவரும் தனியார் பட்டாசு ஆலையில் நேற்று காலை-யில் மருந்து கலக்கும் அறையில் எதிர்பாராத விதமாக வெடிவிபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், விபத்தில் காயமடைந்து மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஆவுடையாபுரத்தைச் சேர்ந்த முகமது சுதீன் என்பவருக்கு சிறப்பு சிகிச்சையளிக்க உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இந்த விபத்தில் உயிரிழுந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாவும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு 1 லட்சம் ரூபாவும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

# பட்டாசு ஆலை விபத்துகளுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்

பட்டாசு ஆலை பாதுகாப்பு விதிகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி, விபத்துகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

"விருதுநகர் மாவட்டம் அப்பைநாயக்கன்பட்டி கிராமத்தில் செயல்பட்டு வரும் தனியார் பட்டாசு ஆலையில் நேற்று காலை ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோருக்கு தரமான மருத்துவம் அளிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். உயிரிழுந்தவர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 4 லட்சம் ரூபா இழப்பீடு போதுமானதல்ல. உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பங்களுக்கும் தலா 25 லட்சம் ரூபா நிதி உதவியும், காயமடைந்தவர்களுக்கு 5 லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கப்பட வேண்டும்.



விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி மற்றும் அதையொட்டியுள்ள பகுதிகளில் உள்ள பட்டாசு ஆலைகள் மற்றும் வெடி ஆலைகளில் அண்மைக்காலங்களில் விபத்துகளும், உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன. வாரத்திற்கு ஒரு விபத்து என்பது வாடிக்கையாகி விட்டது. பட்டாசு ஆலைகள் தொடர்பான பாதுகாப்பு விதிகள் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படாதது தான் இத்தகைய விபத்துக்கள் அதிகரிப்பதற்கான காரணம் ஆகும். பட்டாசு ஆலை பாதுகாப்பு விதிகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி இத்தகைய விபத்துகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்று குறிப்பிட்டுள்ளார்.



# காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 28 பேர் பலி

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய மற்றொரு தாக்குதலில் 28 பாலஸ் தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த இரண்டு நாள்களில் மாத்திரம் காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குத லில் 130 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந் துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், காசா பகுதியிலுள்ள 27 சுகாதார நிலையங்கள் மீது 136 தாக்கு தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

## வயதான பெண் 116 வயதில் காலமானார்



உலகின் மிகவும் வயது முதிர்ந்த பெண்மணி என்ற கின்னஸ் சாதனை யில் இடம்பிடித்த ஜப்பானை சேர்ந்த டோமிகோ இடுகா நேற்று காலமானார்.

1908 மே 23 ஆம் திகதி பிறந்த இவர் தமது 116 ஆவது வயதில் காலமானார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக உலகின் அதிக வய தான நபராக இருந்த ஸ்பெயின் நாட்டை சேர்ந்த மரியா பிரானியாஸ் தமது 117ஆவது வயதில் கடந்த ஆண்டு காலமானதைத் தொடர்ந்து இவர் உலகின் மிகவும் வயதானவர் என்று அறிவிக்கப்பட்டார்.

அத்துடன், வரலாற்றில் 116 வயதை எட்டிய 30 ஆவது நபர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## சீனாவில் மரக்கறி சந்தையில் தீப்பரவல்; 8 பேர் உயிரிழப்பு

சீனா – ஷாங்காய் நகரில் மரக்கறி சந்தையொன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 15 பேர் காயமடைந்துள்ளனர்.

ஷாங்காய் – ஹெபேய் பகுதியில் அந்த நாட்டு நேரப்படி காலை 8.40 அளவில் விபத்து இடம்பெற்றதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தீயணைப்பு பிரிவினர் மற்றும் அவசர சிகிச்சை மருத்துவத் துறையி னர் இணைந்து தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளை முன்னெடுத்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 05.01.2025




உங்களின் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இன்று பயனுள்ள பலன்கள் சாத்தியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் செயல் திறன் அசர வைக்கும். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளை கலந்தாலோசித்து சுமூகமான தீர்வு காணுவீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பூர்வீகசொத்து மூலம் பணவரவு வர வாய்ப்புள்ளது.

உங்கள் நேர்மறை எண்ணம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று அவநம்பிக்கையும் அமைதியின்மையும் காணப்படும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் அதிகம் சாதிக்கலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டும். உங்கள் சக பணியாளர்களிடம் உரையாடும்போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொண்டு நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஏமாற்றத்தை அளிக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும்.




இன்று மிதமான பலன்களே காணப்படும். இன்று செயல்கள் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். சில பணிகள் நிலுவையில் நிற்கும். இன்றைய சவால்களை சந்திக்க சமநிலை போக்கு தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நீங்கள் வருத்தமான மனநிலையில் இருப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு எழும். இதனால் முரண்பாடு எழும். இருவரும் பரஸ்பரம் பேசிக் கொள்வதன் மூலம் தீர்வு காணலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் தாயாருக்கு சிறிய உடல் நலக் கோளாறு காணப்படும்.




இன்று இனிமையான நாள். உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் செயல்களை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் பணிகளை சிறந்த தரத்துடன் முடித்து தருவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கி யிருப்பு உயரும். நீங்கள் இன்று புதிய முதலீடுகளை செய்யலாம். அது லாபகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும். கவனம் மற்றும் சிறப்பான திட்டம் நல்ல பலன் தரும்.

நீங்கள் உங்கள் துணையுடன் விஷயங்களை தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது நிலையான உறவிற்கு நல்லதல்ல. எந்த விஷயத்தையும் லேசாக சாதரணமாக எடுத்துக்கொள்ளுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவில் காணப்படாது. இன்று கணிசமான தொகை சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைவு.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மற்றும் யோகா மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் ஏற்படும்.




இன்று சுமூகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் திட்டமிட்டு கடினமாக உழைக்க வேண்டும். இன்று அதிர்ஷ்டம் காணப்படாது.

உங்கள் சக பணியாளர்களின் வளர்ச்சி காரணமாக நீங்கள் பாதுகாப்பற்ற தன்மை உணர்வீர்கள். அவர்கள் பணியில் முன் நிலையில் இருப்பார்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது வன்மையாக நடந்து கொள்வீர்கள். பதட்டமில்லாத நல்லுறவை ஏற்படுத்த இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலையில் ஏற்ற இறக்கம் காணப்படாது. பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டியது அவசியம்.




இன்று சகஜமாகவும் நகைச்சுவை போக்கும் மேற்கொண்டால் நன்மை ஏற்படும். பிரச்சினைகளை சமாளிக்க இயலும். பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

முறையாக திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக ஆற்றலாம். அதன் மூலம் வெற்றி காணலாம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு கவனமற்ற வார்த்தைகளை பேச வாய்ப்புள்ளது. இது உறவில் மகிழ்ச்சியைக் கெடுக்கும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

கண் மற்றும் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சாதகமான நாள்.குறைந்த முயற்சியில் அதிக வெற்றி பெறுவீர்கள். இன்று நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். இதனால் நன்மை ஏற்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள். இது உங்கள் சகபணியாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இது அவரை மகிழ்விக்கும். எனவே பொதுவாக இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.01.2025




இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபகரமாக இருக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்காக உற் சாகத்துடன் முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதன் மூலம் அவர் உங்கள் உற வின் மதிப்பை உணரலாம்.

இன்று போதிய அளவு நிதி காணப்படும். உங்கள் பணத் தேவைகள் இன்று பூர்த்தியடைய அது உதவும். நீங்கள் அதிக அளவில் பணம் சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது சில சமயங்களில் நீங்கள் பொறுமையின்றி காணப்படுவீர்கள். நீங்கள் தைரியம் இழக்கும் வகையில் கடினமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் திட்டமிட்டு மிகுந்த கவனத்துடன் செயலாற்ற வேண்டும்.

நீங்கள் அற்ப விஷயங்களைக் கூட பெரிதாக்கு வீர்கள். இது உங்கள் உறவில் குழப்பத்தை ஏற்படுத் தும். நீங்கள் உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பயணத் தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். இன்று செரி மானம் சம்பந்தமாக பிரச்சினை காணப்படும்.




இன்றைய நாள் சிறந்த பலன் தர சாதகமாக அமையாது. நீங்கள் கடின மாக உழைக்க வேண்டியது அவசி யம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வும்.

பரபரப்பான பணிச்சூழல் காணப் படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. இன்று திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க தவறுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

இன்று உங்கள் வங்கியில் கணிசமான தொகை பராமரிக்க இயலாது. செலவுகள் காரணமாக கையி ருப்பு பணம் கரையும்.

இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். இதனால் பதட்டம் ஏற்பட்டு ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று வாய்ப்புகளும் அதிர்ஷ்டமும் நிறைந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் தன்னம் பிக்கை அதிகரித்துக் காணப்படும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக் கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் உயர்ந்த நிலை அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட உதவும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனால் உங்களிடம் திருப்தி காணப்படும். உங்கள் வங்கி யிருப்பு அதிகரிக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சிய ளிக்கும்.



# புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் அடுத்த வாரம்

2024 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத் தாள் திருத்தும் பணி எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இந்த பணி எதிர்வரும் 12 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதன்படி, விடைத்தாள் திருத்தும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப் பட்டு பெறுபேறுகள் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித் துள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி 2,849 பரீட்சை மத்திய நிலை யங்களில், 2024 ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்டதுடன், அதில் 323,879 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இந்த பரீட்சையின் முதல் பகுதி வினாத்தாளில் 3 வினாக்கள் பரீட்சைக்கு முன்னதாகவே கசிந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டது

இது தொடர்பாகத் தாக்கல் செய் யப்பட்ட மனுக்கள் தொடர்பான உத்தரவு ஒன்றைக் கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி உயர்நீதிமன்றம் அறிவித்தது.

இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நிபுணர் குழு முன்வைத்த மூன்றுபரிந்துரைகளில்மிகவும்பொருத்த மான ஒன்றைத் தெரிவு செய்து அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உயர்நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அமைய, ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதி வினாத் தாளில் கசிந்த 3 வினாக்களுக்கும் முழுமையான புள்ளிகளை வழங்கு வதற்குப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தநிலையில், குறித்த பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணி எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.